முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1308

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

29.04.2023, சனிக்கிழமை

1. தர்மத்தின் காவலனே அரங்கா வாழ்க
தவபலத்தை தர்மமாக உலகுக்கு அருளி
அவதாரம் புரிந்தநல் அரங்கனே வாழ்க
ஐயனே அரங்கன் உமக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
உரைத்திடுவேன் சோபகிருது தகர்திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 16 ம் நாள், 29.04.2023, சனிக்கிழமை)
ஞானவான் அரங்கன் உன் வழிகாட்டலில்
ஞாலமதில் உலகோரெல்லாம் ஞானிகளாக
3. ஆகவே மாற்றம்தான் அடைந்து
அகிலமெங்கும் பாதுகாப்பு அமைதி
மகிழவே மக்களுக்கு மாற்றமாகி
மண்ணுலகம் ஞான ஆட்சித்தனை பெறும்
4. ஞான ஆட்சி அருளவந்த ஞானி அரங்கன்
நல்வழிகளை உலகோர் ஏற்றால்தான்
தானதர்மநிலைகள் எங்கும் பரவி
தவராஜன் தர்மமும் தவமும் ஆற்றலாகி
5. ஆகியே அகிலத்தை மாற்றக்கூடும்
அரங்கஞானி அருளால் தான் இந்த அற்புதம் நடக்கும்
அகிலத்தார் அன்னதனால் ஒன்றுசேர்ந்து
அரங்கன் குடில் நோக்கி வந்து ஞானம் பயில
6. பயிலவே உலகிற்கு மாற்றம் உண்டு
பரோபகாரமிக்க ஞானவான்கள் ஆளுகின்ற
தயவான ஆட்சிகளாக உலகம் சடுதி
தக்கபடி மாற்றம் கண்டு தேறக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–